விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினம் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை மீ 14உ சனிக்கிழமை — Colombo, November, 29, 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 15 | இதழ் 179

வடமாகாணத்தில் 2000 ஏக்கர் வயற்செய்கை சேதம்!

விதை நெல்லும், நாற்றும் வசதியளிப்போம்; வட்டியுடன் தரவேண்டும் என்றாராம் மந்திரி

"ஆனால் ஒன்றும் கிடைக்கவில்லை" என்கிறார் கோப்பாய் பிரதிநிதி வன்னியசிங்கம்

வகுப்புவாதத்தைப் பரப்புவது மந்திரி சபைதான்!

தேனீர்க் கோப்பையுள் பெரும் புயலா?

வெள்ளத்தால் அவதியுற்ற வடமாகாண விவசாயிகள் வட்டியுடன் திரும்பக் கொடுக்க சம்மதித்தால் கிளிநொச்சி, பரந்தன் அரசினர் கமங்களிலிருந்து விதை நெல்லும், நெல் நாற்றும் கொடுக்கும்படி விஷயம் தெரியாது உத்தரவிட்ட விவசாய மந்திரியை கோப்பாய் பிரதிநிதி திரு. ஸி வன்னியசிங்கம் நேற்று காலையில் பிரதிநிதிகள் சபையில் அம்பலப்படுத்தினார்.

"விதை நெல்லு வட்டியுடன் திரும்பக் கொடுக்கலாம்! ஆனால் நெல் நாற்றைத் திரும்ப வட்டியுடன் கொடுப்பது எப்படி? நெல் நாற்றுகள் தோடங்கன்றுகள் போன்று மரக் கொட்டுக்களில் எந்தக் காலங்களிலும் உண்டாக்கப் படக்கூடியனவா?"

"ஆனால் இறுதியில் மாகாண அரசாங்க ஏஜெண்ட் எழுதிய கடிதத்திற்கும் ஒருவிதமான பதலும் மந்திரியிடமிருந்து கிடைக்கவில்லை! விவசாய மந்திரியும், உணவு மந்திரியும் ஆலோசிக்கிறார்கள்போலும்!"

கொழும்பு, நவ. 29

பாராளுமன்றக் கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப் மொலமுரே தலைமையில் ஆரம்பமாயது.

1947-48-ம் வருட வரவு செலவுத் திட்டத்தின் சபையில் சம்பிரதாய முறைப்படி சமர்ப்பித்தார். இதனை திரு ஆர். எஸ். எஸ். குணவர்தன அனுமதித்தார். இதன் பின் பிரதிநிதிகள் சபையிலிருந்து சர்வ கலாசாலை 'கோர்ட்'டுக்கு ஆறு அங்கத்தினர்களைத் தெரிவு செய்வதற்கு சபையில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. இச்சபைக்கு கீழ் கண்டவர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

டாக்டர் என். எம். பெரேரா. திரு. பி. ஜி. பி. கெனமன், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. எச். எஸ் இஸமாயில், திரு. எம் டி. பண்டா, திரு. ஸி. சுந்தரலிங்கம். திரு. வி. நல்லையா, திரு எஸ். ஏ. பேக்மன், திரு. வி. டி. நானயகாரா, திரு. ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர், திரு. டி. பி. பனபொக்கே, திரு. ஜி. ஏ. டி. சொஸ்னா.

பிரதிநிதிகள் சபை லிகிதர் திரு தெரனியகல பிரதிநிதிகளிடையே- வாக்குச் சீட்டுகளை விநியோகித்தார். இதன் பின் தெரிவு நடைபெற்றது. தெரிவின் பின் சபாநாயகர் கீழ்க் கண்டவர்கள் சர்வ கலாசாலைக் கோட்டுக்குத் தெரிவு செய்யப்பட்டதாக வெளியிட்டார்.

(1) திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் (49) வாக்குகள் (2) திரு. பீட்டர், ஜி. பி. கெனமன் (44) வாக்குகள் (3) டாக்டர் என். எம். பெரேரா (43) வாக்குகள் (4) திரு. எம் டி. பண்டா (38 வாக்குகள் [5] திரு. வி டி நானயக்காரா [33] வாக்குகள் (6) திரு. ஸி. சுந்தரலிங்கம் [30 வாக்குகள்]

கவர்னரது பிரசங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீதும் எதிர்க் கட்சியால் கொண்டுவரப்பட்ட திருத்த பிரேரணை மீதும் சபையில் விவாதம் தொடர்ந்து ஆரம்பித்தது. திரு. எம். ஏ. எல். கரியப்பர் தொடர்ந்து பேசியதாவது:-

இலங்கைக்கென தனி நாகரீகம் பண்டுதொட்டு இருந்துள்ளது. ரஷிய 'வழக்கங்களை இங்கு புகுத்த நினைப்பது அசம்பாவிதமான தாகும்.

'யூ. என். பி.-சோஷலிஸ்ட்'

யூ. என். பியைச் சேர்ந்தவர்கள் சோஷலிஸ்டுகளே. கிராமப் பகுதிகளில் உள்ள இலங்கை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே அவர்கள் முன்வந்துள்ளனர். அரசியல் சுதந்திரத் தினைப் பெறுவதன் மூலம் பொருளாதாரச் சுதந்திரத்தினைப் பெறலாம்.

குடியேற்றப் பிரச்னை

இலங்கையில் அந்நியர் கட்டுப்பாடின்றி குடியேற அனுமதிக்கவேண்டுமென்பதை நான் எதிர்க்கிறேன். வெள்ளக் கடவைகளைத் திறந்து விட்டால் வெள்ளம் எப்படிப் பாயுமோ அவ்விதம்தான் குடியேற்றம் கட்டுப்படுத்தப் படாதிருப்பதும் இருக்கும்.

கீ. மா. சிங்கள மன்னர் ஆட்சி

மட்டக்களப்பு வடக்குப் பகுதியுடன் ஒருபோதும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. கிழக்கு மாகாணம் எப்பொழுதும் சிங்கள அரசர்கள் ஆட்சியின் கீழேயே இருந்துள்ளது. கீழ் மாகாண மக்கள் சிங்கள அரசர்களுக்கே கீழ்ப்படிந்து நடந்தனர்.

இதன் பின்னர் திரு. காரியப்பர் தொடர்ந்து பேசுகையில் திரு. டப்ளியூ. தஹநாயகாவை இகழ்ந்துரைத்ததால் திரு. தஹநாயகாவுக்கும் திரு. காரியப்பருக்கு மிடையில் காரசாரமான வார்த்தைகள் பரிமாறப்பட்டன. திரு. காரியப்பர் பேசுகையில் கூறியதாவது:-

திரு. தஹநாயகா, சர்ச்சில் மாதிரி கம்பீரமான தொனியில் பேசியபோதிலும் அவரது பேச்சு ஒரு அரசியல் வியபிசாரியின்பேச்சுப்போன்றேஇருந்தது.

திரு. தஹநாயகா இதனை ஆட்சேபித்துப் பேசுகையில் 'என்னிலும் பார்க்க உமக்கு விபசாரிகளைப் பற்றி அதிகம் தெரிகிறது' என்று கூறினார்.

சபாநாயகர் இதன்பின் திரு. தஹநாயகா பேசியதை வாபஸ் பெற வேண்டுமென்று கூறினார். திரு. தஹநாயகா பேசியதை வாபஸ் பெற்றுக்கொண்டு மற்றப் பகுதியினரையும் இவ்விதம் இனிமேல் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளும்படி சபைத் தலைவருக்கு தெரிவித்தார். தம்முடன் திரு. தஹநாயகா விவாதம் நடத்த வேண்டாமென்று கூறி அவரை அவரது ஆசனத்தில் இருக்கும்படி சபாநாயகர் பதிலளித்தார். இதனை ஆட்சேபித்து திரு. தஹநாயகா சபையைவிட்டுவெளியேறினார்.

இந்த இடைநேரத்தில் மீண்டும் வேறு சம்பவம் ஒன்று சபையில் நிகழ்ந்தது. திரு. தஹநாயகா வெளியேறும் பொழுது சபை வாயிலை மூடிவிட்டுச் செல்லும்படி சார்ஜன்ட்அட்ஆர்ம்ஸகட்டளையிட்டதாகவும் பாராளுமன்ற அங்கத்தவருக்குரிய மரியாதை செய்யப் படவில்லையென்றும் டாக்டர் என். எம். பெரேராவும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் சபாநாயகருக்குத் தெரிவித்தனர். தமது உத்தியோகஸ்தருக்கு சபையின் எல்லா வாயில்களும் மூடப்பட்டிருக்க வேண்டுமென்று தாம் சட்டமிட்டுள்ளதாக சபாநாயகர் கூறினார்.

பாராளுமன்ற அங்கத்தினருக்கு சார்ஜன்ட் அட்ஆர்ம்ஸ் கட்டளையிடுவது பாரதூரமான ஒழுங்கீனமென்று டாக்டர் பெரேரா கூறினார். சார்ஜன்ட் அட்ஆர்ம்ஸ் அங்கத்தவருக்கு கட்டளையிட்டாரோ அன்றி அவ்விதம் செய்யும்படி கேட்டுக் கொண்டிருந்தாரோ வென்பது பற்றி தெரியுமா என சபாநாயகர் அவரைக் கேட்டு, இது ஒரு தேனீர்க் கோப்பைக்குள் புயற்காற்றுத்தான் என்றும் கூறினார்.

இதன்பின் கோப்பாய் தொகுதி பிரதிநிதி பேசியதாவது:-

கோப்பாய் பிரதிநிதி திரு ஸி. வன்னியசிங்கம் திருத்தப் பிரேரணையை ஆதரித்துப் பேசியபோது கூறியதாவது:- "எங்கள் மந்திரி சபை புதுப் பள்ளிக்கூடத்தில் புதிய முறை புகுத்தப்பட்டது போன்று இருக்கின்றது.

நேற்று விவசாய மந்திரி, டொனமூர் திட்டத்தில் அரசாங்க சபையின் அனுமதியின்றி அச் சபையின் மூப்பனார் திருத்தங்கள் கொண்டு வந்ததாகக் கூறினார். ஆனால் அக்காலத்தில் அரசாங்க சபையில் திருத்தங்கள் சட்டப்படி அனுமதிக்க முடியாதிருந்தது. ஆயின் இப்பொழுது என்ன நடந்திருக்கிறது? இரண்டு திருத்தங்கள். தேர்தல் நாட்களுக்குப் பின் கொண்டுவந்த திருத்தங்களை விட்டுவிடுவோம். அரசியல் குற்றவாளிகள் சம்பந்தமாகவுள்ள 13-ம் நம்பர் சட்டத்தை அரசாங்க சபை மாற்றும்படி தீர்மானம் நிறைவேற்றியும் அது மாற்றப்படவில்லை.

ஆயின் இப்பொழுதுபாராளுமன்றம் கூடிய பின்பும் வெள்ளை மாளிகைக்கு அரசியற் சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு தந்திகள் பறக்கின்றன. அரசியற் சட்டத்தின் 29 (4) ம் பிரிவின்படி திருத்தங்கள் கொண்டுவருவதற்கு வசதியிருந்தும் மந்திரிகள் வெள்ளை மாளிகையையே நோக்குகின்றனர். அரசாங்க சபைச் சட்ட திருத்தத்திற்கும் சுதந்திரத்திற்கும், இதைப் போன்ற அதிசயம் வேறெங்கு உண்டு.

கூட்டரசாங்கம்

கூட்டரசாங்கத்தைப் பற்றி திரு. வன்னியசிங்கம் குறிப்பிட்டுப் பேசுகையில் சொன்னதாவது:-

"கண்டியர்கள் கூட்டரசாங்கமும் தனியாட்சி நாடும் கேட்டால் அது களியாட்டாக நடத்தப்படுகிறது. ஆனால் தமிழர் கூட்டரசாங்கமும் தனியாட்சி நாடும் கேட்டால் அது கோபத்துக்கும், மனஸ்தாபத்துக்கும் இடமாகின்றது.

ஒருவர் இலங்கையை இந்து சமுத்திரத்திலுள்ள சிறிய இங்கிலாந்து என்றால் அவருக்கு மந்திரிப் பதவி கிடைக்கின்றது, ஆனால் ஒரு தமிழன் கூட்டரசாங்கம் வேண்டுமென்றால் அது பாரதூரமான குற்றமாகக் கருதப்படுகிறது.

ஒருவர் பிரிட்டன்தான் எங்கள் ஊழி ஊழி உறவின் முறையினர் என்றால் அவர் சொல்லுவது சரி. ஆனால் ஒருவர் ரஷியா முறைகளை நல்லதென நினைத்து கௌரவித்தால் அவர் ஒரு குற்றத்துக்கு ஆளாகின்றார்.

திருகோணமலை பிரிட்டிஷாருக்குத் தளமாகக் கொடுக்கப்பட்டால் அது சந்தோஷத்துக்குரிய காரியமாக இருக்கின்றது ஆனால் தமிழர் இந்தியா-திருகோணமலைத் தளததை வேண்டுமென்றால் திருகோணமலை மக்கள் எவ்விதம் நடந்து கொள்ளுவார்கள் என்று கேட்டால் அது பெரும் பழியாகக் கருதப்படுகிறது.

திருகோணமலை தமிழருடையது

திரு. வன்னியசிங்கம் திருகோணமலை கண்டிச் சிங்களவரது என்று நேற்று ஒரு பிரதிநிதியால் கூறப்பட்டது. அது தப்பு. ஆனால் அந்தக் கண்டிப் பிரதிநிதி வேண்டுமாப்போல் 1815-ம் ஆண்டுமுறை மீண்டும் ஏற்படுத்தப்பட்டால் நான் அதையிட்டு சண்டைசெய்ய மாட்டேன். காரணம்? தமிழன் தான் அரசனாக இருப்பான். தமிழ்தான் அரசாங்க பாஷையாக இருக்கும். ஆகவே கவலையில்லை.

தொடர்ந்து திரு. வன்னியசிங்கம் பேசியபோது சென்ற இரவு, வட்டுக்கோட்டைக் கூட்டமொன்றில் தமிழ்க் காங்கிரஸ பிரதிநிதிகள் தங்களுக்கு மந்திரிப் பதவி கொடுக்கப்படவில்லை எனக் கூறிய செய்திப் பத்திரிகையொன்றில் குறிப்பிட்டிருந்ததைப்பற்றி விவசாய மந்திரி பிரஸ்தாபித்ததையிட்டுச் சொன்னதாவது:-

"ஆங்குள்ள அந்த ஆங்கிலப் பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபர், யாழ்ப்பாணத்தில் தோல்வியுற்ற ஒரு அபேட்சகரை ஆதரிப்பவர். அக் கூட்டத்திற்கு அவர் வரவே இல்லை அக் கூட்டத்தில் ஒரு தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதியும் மந்திரிப் பிச்சை கேட்கவுமில்லை விவசாய மந்திரி இதை உணர்ந்துகொள்ளட்டும்.

விவசாயம்

திரு வன்னியசிங்கம் விவசாயத்தையிட்டுப் பேசியதாவது:-

இந்த வருட அக்டோபர் மாதத்தில் வட மாகாணத்தில் 2000 ஏக்கர் நிலம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டது. இப்பொழுது புதிய நிலங்களைவிதைப்பதற்கும், பள்ளக் காணிகளை நாற்று நடுவதற்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு அரைவாசிச் செலவை விவசாயிகளும் அரைவாசிச் செலவை அரசாங்கமும் பொறுக்கவேண்டுமெனச் சொல்லப்பட்டுள்ளது இது அரசாங்கத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவைப் பிடிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராமக்கமிட்டிகள் மகாநாட்டில் மந்திரி சபையிடம் இப்பணத்தைப் பெற்றுத் தருவதாக ஸ்தலஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயக்கா வாக்குறுதியளித்தார். இம் மாதம் 8-ம் தேதி விவசாய மந்திரி காரியாலயம் பதிலளித்தது. அப்பதிலில் விதை நெல்லும், நெற் பயிர்களும் விவசாயிகளுக்குப் பரந்தன் கிளிநொச்சி அரசாங்க கிராமங்களிலிருந்து கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இவற்றைப் பின் கமக்காரர்கள் வட்டியுடன் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

விஷயம் தெரியாது

"நெற் பயிர்கள் திருப்பிக் கொடுப்பது என்பது எவ்வகையில்? மந்திரிக்கு விஷயம் தெரியாது என்பதையே இது காட்டுகின்றது. நெல் நாற்றுக்கள் தோடம் கன்றுகள் போன்று கொட்டுக்களில் வைத்து எல்லாக் காலங்களிலும் விற்கப்படக்கூடிய தல்லவென்பதை அம்மந்திரியார் உணர வேண்டும். பத்துப் பங்கில் ஒரு பங்கைததான் அரசாங்க நாற்றுகள் கொண்டு நடுகை செய்யமுடியும். வேறு விவசாயிகளிடமிருந்து நெல் நாற்றுக்கள் வாங்கி நடுவதை மந்திரியார் அங்கீகரிக்க வில்லை. காரணம்? வெள்ள நஷ்டத்திற்குப் பண உதவி செய்வது அம்மந்திரி காரியாலயத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

"இதன் பின்பு வடமாகாண ஏஜெண்டு இவ்விஷயம் பண உதவியல்ல, ஆனால் உணவு உற்பத்தி என்று மந்திரிக்கு எழுதினார் இதை இம்மாதம் 13-ம் தேதி அவர் அவசர கடிதமூலம் அனுப்பினார். உடனே நாற்று நடவேண்டி யிருப்

[4-ம் பக்கம் பார்க்க]

பாம்காடன் எஸ்டேட் வேலை நிறுத்தம்

தொழிலாளர் ஒற்றுமையைக் கலைக்க வகுப்புவாதப் பிரசாரமா?

வேலை நிறுத்தக்காரருக்கு ரத்தினபுரியில் ஆதரவு

ரத்தினபுரி, நவ. 28

தொழிலாளர்கள் கோரியுள்ள கோரிக்கைகள் கிடைக்கும்வரை தொடர்ந்து வேலை நிறுத்தத்தினை நடத்துவதென "பாம்காடன்" எஸ்டேட்டில் உள்ள 1700 தொழிலாளரும் திட்டமாக முடிவு செய்துள்ளனர் என்று அறியப்படுகிறது. வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்களுக்கு உணவுப் பொருள்கள் முதலியனவற்றை ரத்தினபுரி டிஸ்டிரிக்டிலுள்ள தொழிலாளர்கள் அனுப்பியுள்ளனர். இங்குள்ள நிலைமைபற்றி ரத்தினபுரி டிஸ்டிரிக்டிலுள்ள சகல தொழிலாளர்களும் நன்கறிந்துள்ளனர். இத்தொழிலாளர்களுக்காக அனுதாப வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்க அவர்கள் ஆயத்தம் செய்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாது இருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறதாம். வேலை நிறுத்தக்காரர்களுக்கு தங்கள் ஆதரவை எடுத்துக்காட்டும் முகமாக ரத்தினபுரி டிஸ்டிரிக்டில் உள்ள சகல தொழிலாளர்களும் ரத்தினபுரி முற்றவெளியில் ஞாயிற்றுக்கிழமை ஒரு பெரிய கூட்டத்தை நடத்தவிருக்கின்றனராம். தோட்ட நிர்வாகிகள் தொழிலாளரிடையே வகுப்புவாத பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர் இந்த வகுப்புவாதப் பிரசாரத்தினால் தொழிலாளரிடையே பிளவை ஏற்படுத்தி வேலை நிறுத்தத்தை முறியடிக்க நிர்வாகிகள் முயற்சிக்கின்றனராம். இந்த நடவடிக்கையை தொழிலாளர்கள் தங்களது கூட்டங்களில் வெகுபலமாக கண்டித்திருக்கின்றனர்.

கள்ள மார்க்கெட்டுக்கு ரூ. 100,000 மதிப்புள்ள ஜவுளி

நான்கு லொறிகளில் ஏற்றிவரப்பட்டது

13 பேர் இன்று கைது

ரங்கூன், நவ. 28

நான்கு லொறிகள் நிறைய ஜவுளிகளை ஏற்றி வந்த ஐந்து பிரிட்டிஷ் யுத்த வீரர்களும், ஏழு பர்மியரும், ஒரு சீனரும் இன்று ரங்கூனில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த ஜவுளிகள் ரூ 100,000 மதிப்புள்ளவையென்று கூறப்படுகிறது. ரங்கூன் கள்ள மார்க்கெட்டுகளில் விற்பனை செய்வதற்காகவே இந்த ஜவுளி கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகிறது [ராய்ட்டர்]

பாரசீகத்துக்கு புதிய இந்திய ஸதானிகர்

டெஹ்ரான், நவ. 28

பாரசீகத்தில் இந்திய ஸதானிகராக நியமிக்கப்பட்டஜனாப் சையத் அலி ஸாஹிர் இன்று பாரசீக அயல்நாட்டு மந்திரியிடம் தமது பதவி சம்பந்தமான தஸதாவேஜுகளை சமர்ப்பித்தார் என்று டெஹ்ரான்ரேடியோ அறிவிக்கின்றது. இரு நாடுகளிடையேயும் உள்ள நேசத் தொடர்பு இன்னும் பலப்படுத்தப்படும் என்று இருவரும் தெரிவித்தனர் என்றும் ரேடியோவில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [ராய்ட்டர்]

நிலக்கரித் தொழில் தேசியமயம்

டோக்கியோ, நவ. 26

ஜப்பானிய ஜனப் பிரதிநிதிகள் சபை நேற்றிரவு நிலக்கரி தொழிலைத் தேசியமயமாக்கத் தீர்மானித்துள்ளது. [ராய்ட்டர்]

டாக்டர் ஷாரியார்

ஆஸதிரேலியா செல்வார்

சிங்கப்பூர், நவ. 26

இந்தோனேஷிய மாஜிப் பிரதமர் ஷாரியார் அடுத்த வாரம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வார் எனத் தெரிகிறது. அவர் தற்போது இந்தியாவில் இருப்பதாகவும் நவம்பர் 30-ம் தேதி சிங்கப்பூர் வருவார் எனவும் அறியப்படுகிறது. [ராய்ட்டர்]

அழகிய கலண்டர்!
வாங்கும்போது
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்
என்று கேளுங்கள்
தேதி ஒற்றைகளில் "மெய்கண்டான் பிறௌ" என்று பதித்திருப்பதைக் கவனித்துப்பார்த்தவாங்குங்கள். யுத்தகாலத்திற்கு முன்போல் பார்வைக்குகந்த அழகிய பெரிய தேதிகள், நல்ல கடுதாசி பலவித அழகிய படங்கள், திருக்குறள், மணிவசனங்கள் (சகல விஷயங்களும்) உள்ளது, எங்கும் கிடைக்கும்.
பிந்தினால் கிடைப்பதரிது!
மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி P.O.

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
79, பார்பர் ஸ்டிரீட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, கட்டாரத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வஜித்து ஞு கார்த்திகை மீ 14உ சனிக்கிழமை

சந்தைக் கூப்பாடு வேண்டாம்!

"பார்லிமென்ட்" என்னும் சொல் ஒரு ஆங்கிலப் பதம். இதற்கு ஆங்கிலேயர்கள் "பேசும் சந்தை" என்று அர்த்தம் கொடுத்துள்ளார்கள். இச்சொல்லைத் தமிழர் "பாராளுமன்றம்" என்று மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்துள்ளனர். தமிழில் பாராளுமன்றம் என்பதற்கு வேறு அர்த்தம் கொடுக்கக் கூடியதாக விருந்தாலும், நாம் ஆங்கிலச் சொல்லிற்கு அவர்களின் அர்த்தத்தையே கொடுக்க வேண்டும். பிரிட்டிஷ் அரசர் பாராளுமன்றத்தைக் கூப்பிட்டுள்ளார் என்று நாம் வாசிக்கிறோம். அதன் அர்த்தமென்ன? தேச விஷயம் சம்பந்தமாக மக்களின் பிரதிநிதிகள் நன்றாகக் கலந்து ஆலோசித்து பேசித் தங்கள் தீர்மானத்தை வெளியிட வேண்டுமென்பதுதானாகும். ஆனால் தேச விஷயம் சமபந்தமாகப் பேசுவதென்பது வாயில் வந்தவற்றையெல்லாம் உளறித் தள்ளுவதல்ல. இதில் பிரிட்டிஷ் மந்திரிகள் மிகவும் கவனமாக இருப்பார்கள். தாம் பேசுவது யாவும் பிழை படா வண்ணம் பாதுகாத்துக் கொள்ளுவார்கள். அதுவுமல்லாமல் சுருக்கமாகவும், தெளிவாகவும் பேசுவார்கள். இதற்காகவே அவர்கள் தங்கள் பிரசங்கங்களை முன் கூட்டி எழுதி சபையில் வாசிப்பார்கள்.

பிரிட்டிஷ் முறையில் இலங்கையிலும் பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது சென்ற செவ்வாய்க்கிழமை நடந்த முதல் கூட்டத்தில் மந்திரிகள் தங்கள் எதிர்காலக் கொள்கைகளை எடுத்துக் கூறவேண்டியிருந்தது. சிலர் அவ்விதமே செய்தார்கள். ஆனால், அன்று ஒரு முண்டாசு கட்டிய தமிழ் மந்திரி பேசியவற்றையிட்டு நாம் தலை குனியத்தான் வேண்டும். 'காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்' என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் மீது வாயில் வந்த விஷம் எல்லாம் கக்கினார். அவர் தான் வர்த்தக மந்திரி திரு. சுந்தரலிங்கம். இவர் மெத்தப்படித்த மேதாவி. சர்வ கலாசாலையில் கணிதப் பேராசிரியராக இருந்த வருடா வருடம் பட்டதாரிகளை தயாரித்தவர். இவருடைய எதிரிகளும் இவர் தெரிவு செய்யப்பட்டபொழுது இவர் தேசவிஷயத்தில் அக்கறை செலுத்தக் கூடும் என்று நினைத்தார்கள் ஆனால் அவர் நடந்து கொண்ட விதம் எந்ததேசத்தின் சபைக்கும் கௌரவத்தைக் கொடுப்பதாகாது.

இவர் நடந்த விதத்தையிட்டு சபையில் பேசிய இரு பிரதிநிதிகள் தாம் சபைக்குச் சமுகமளித்தது அரசாங்கத்தின் கொள்கையைக் கேட்கத்தான் என்றும் வர்த்தக மந்திரியிடம் கிடைத்ததுஏமாற்றம்தானென்றும் கண்டித்தார்கள். இவர்கள் பேசியபோது திரு சுந்தரலிங்கம் வாய் திறக்கவில்லை. தமது பிழையை ஒப்புக் கொண்டார் என்றே நம்புகிறோம். திரு சுந்தரலிங்கததை வவனியா மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்தது தேச விஷயத்தையிட்டுப் பேசத்தான். இதைவிட்டு பிரதிநிதிகள் சபையைக் கறிகடையாக எண்ணுவது எவருக்கும் திருப்தி அளிக்காது.

யாழ்ப்பாண நகர சபை வரவு செலவு

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாண நகர சபையின் வரவு செலவுத் திட்ட நகல் தயாராகிவிட்டது. நகர சபையின் விசேஷக் கூட்டத்தில் இத்திட்டம் ஆலோசனைக்கு வரும. நகல் திட்டத்தினபடி நகர சபையின் 1948-ம் வருடத்திய உத்தேச வருமானம் ரூபாய் 772,273; உத்தேசச் செலவு ரூபாய் 770,048.

இலங்கையைப் பாதுகாக்க பிரிட்டனுக்கு ஒன்றரைக்கோடி ரூபாய் தட்சணை

புதிய நிர்வாகம் 12 லட்ச ரூபாயை விழுங்குகிறது

இந்தியா, பிரிட்டன் தவிர ஏனைய 5 நாடுகளில் இலங்கை பிரதிநிதிகள் செலவு 4 லட்சம்

வருமானவரி, இறக்குமதிவரி மூலம் கிடைக்கும் வருமானம் விழுந்து விட்டது

யுத்தப்படிச் செலவுக்குப்பதில் வாழ்க்கைத் தரப்படிச் செலவு

புதிய அரசாங்கத்தின் 1947-1948-ம் வருடத்திய உத்தேச வரவு செலவுத் திட்டம்

கொழும்பு, நவ. 28

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் உத்தேச வரவு செலவுத் திட்டம் இலங்கை பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் முக்கியமான அம்சங்கள் என்னவெனில், வருமானவரி மூலமும் அமிதலாபவரி மூலமும் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைந்து விட்டது; ஏற்றுமதி வரி மூலம் கிடைக்கும் வருமானம், முக்கியமாக தேயிலை ஏற்றுமதி வரிமூலம் கிடைக்கும் வருமானம் அதிகரித்திருக்கிறது. 1947 அக்டோபர் முதல் தேதி முதல் 1948 செப்டம்பர் 30-ம் தேதி வரை அரசாங்கத்தின் உத்தேச வரவு ரூ. 441,551,377. உத்தேச செலவு ரூ. 435,672,408. இந்தத்திட்டத்தில் ரயில்வே, மின்சாரம் இவைகளின் வரவு செலவு சேர்க்கப்படவில்லை. அவை தனியானவை.

சுங்க வருமானம்

சுங்க வரி மூலம் ரூ. 231,150,000 கிடைக்குமென்று உத்தேசக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த வருமானம் கடந்த வருடத்தை விட 320 லட்சம் ரூபாய் அதிகமாகும். தேயிலை ஏற்றுமதி மீது விதிக்கப்படும் வரி மூலமே இந்த இனத்தில் அதிக வருமானம் கிடைக்கிறது. அதாவது தேயிலை ஏற்றுமதி வரியில் 370 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது இறக்குமதி வரி மூலம் கிடைக்கும் வருமானத்தில் கடந்த வருடத்தை விட 25 லட்ச ரூபாய் குறைகிறது.

வருமான வரி வருமானம் குறைவு

வருமான வரி, கோட்ட வரி, முத்திரைகள், அமிதலாப வரி ஆகிய இனங்களில் வருமானம் கடந்த வருடத்தை விட 250 லட்சம் ரூபாய் குறைகிறது. வருமான வரி வருவாயில் 80 லட்சம் ரூபாயும் அமிதலாப வரி வருவாயில் 170லட்சம் ரூபாயும் குறைகிறது.

செலவினம்

புதிய அரசாங்கம் ஏற்பட்டுள்ளதால் நிர்வாக சம்பந்தமாக புதிய செலவினங்களும் ஏற்பட்டுள்ளன. இந்தப் புதிய நிர்வாகச் செலவு மொத்தம் ரூ 1,269,757. இந்தத் தொகைபின் வரும் செல வினங்களுக்குச் செலவு செய்யப்படும்:-

மந்திரி சபைக் காரியாலய செலவு ரூ 136,724; சென்ட் சபைச் செலவு ரூ. 365,023; பிரதிநிதிகள் சபைச் செலவு ரூ 1,170,471; ஜுடிஷியல் சர்வீஸ் கமிஷன் ரூ 74,726; பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரூ. 134, 356

பாராளுமன்ற அங்கத்தினர்கள் செலவினம்

சென்ட் சபையில் 28 அங்கத்தினர்களுக்குதலா மாதமொன்றுக்கு ரூபாய் 300 வீதம் சம்பளச் செலவு வருடத்திற்கு ரூபாய் 100,800 அத்துடன் 30 அங்கத்தினர்களுக்கும் ரயில்வே பயணம் முசலிப பிரயாணப் படிச் செலவுகள் மொத்தம் ரூபாய் 55,000.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களின் சம்பளங்கள் ரூ. 582,800. அவர்களது பிரயாணப் படிச் செலவு ரூபாய் 187,800.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் கொழும்பில் தங்கியிருக்க வசதியளிக்க எடின்பரோ கிரஸண்டிலுள்ள 'ஸ்ரவ ஸ்ரீ' மாளிகையில் ஏற்படுத்தப்படும் கிளப், ஹாஸ்டல் இவைகளின் செலவு ரூ. 50,000.

"இலங்கை ராணுவம்"

பாதுகாப்பு, அந்நியநாட்டு விவகாரம் ஆகிய இலாக்காகள் சம்பந்தமான செலவினதத்தில் பாதுகாப்புக்காக பிரிட்டிஷ் சர்க்காருக்கு இலங்கை சர்க்கார் கொடுக்கும் பணம சம்பந்தமாக கடந்த வருடம் மந்திரி கோரியது ரூ. 5,599,267. நடப்பு வருடத்தில் ரூபாய் 2,011,112 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பிரிட்டன் இலங்கையில் நிறுவும் ராணுவச் செலவுக்காக இலங்கை சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்கு கொடுக்கும் பணத்திற்கு புதியமான்யம் கோரப்படும். ஆகவே இலங்கை பாதுகாப்புக்காக பிரிட்டனுக்குக் கொடுக்கும் பணம் ஒன்றரைக் கோடி ரூபாயாகும்.

இலங்கை தொண்டர் கடற்படைக்கு கடந்த வருடம் ரூ 286,514 ஆக இருந்த செலவு நடப்பு வருடத்தில் ரூபாய் 753,448 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் இலங்கைக்குக் கொடுக்கும் இரு சிறு யுத்தக் கப்பல்களை நிர்வகிக்க செலவு ரூபாய் 4,00,000.

வெளிநாடுகளில் பிரதிநிதிகளுக்குச் செலவு

வெளிநாட்டு விவகார இலாகா செலவினத்தில் இந்தியாவிலும் பிரிட்டனிலும் நியமிக்கப்படும் இலங்கைப் பிரதிநிதிகள் செலவைத் தவிர்த்து மற்ற 5 நாடுகளுக்கு நியமிக்கவிருக்கும் பிரதிநிதிகள் செலவுக்காக ரூ 400,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் யுத்தப்படிச் செலவு ரூ 32,475,000 ஒதுக்கப்பட்டிருந்தது. நடப்பு வருடத்தில் இந்த இனமே இல்லை. அதற்குப் பதிலாக வாழ்க்கைத் தரப்படி செலவுக்காக மற்ற இலாகாக்களின் செலவினங்களில் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

கிராமாபிவிருத்தி

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிராமாபிவிருத்தி இலாகாவுக்கு செலவு ரூ 522,164 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இனத்தின் கீழ் இந்த இலாகாவுக்கு டைரக்டர், உதவி டைரக்டர், அவர்களது உதவி அதிகாரிகள் அவர்களது பிரயாணப் படிச் செலவு, கிராமப் பகுதிகளை அளப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான செலவு ஆகியவை அடங்கியுள்ளன.

செலவுகள் அதிகரித்துள்ள இனங்கள்

கடந்த வருடத்தை விட நீர்ப்பாசன இலாகாவுக்கு 90 லட்சம் ரூபாய் அதிகமாகவும், வைத்திய இலாகாவுக்கு 140 லட்ச ரூபாய் அதிகமாகவும் இந்த வைத்தியச் செலவில் ஆகாரத்திற்கு மட்டும 40 லட்சம் ரூபாய் அதிகமாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் இலாகா செலவு ஒரு கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படும் மான்யத் தொகைகளும் இதில் அடங்கியுள்ளன.

கல்வி இலாகா செலவு 1 கோடி 80 லக்ஷம் ரூபாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

பூர்வீகப் பொருளாராய்ச்சி இலாகா செலவினதத்தில் ஒருவர் இந்தியா சென்று ரசாயன முறைகளில் பயிற்சி பெறவும் சிகிரியா சித்திரங்களைப் படமெடுத்து அச்சிடவும் செலவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தபால், தந்தி இலாகா செலவு 75 லட்சம் ரூபாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

மராமத்து இலாகா செலவினத்தில் மூன்று கோடி 40 லக்ஷ ரூபாய் செலவு மிகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இச் செலவில் அநேக வேலைத் திட்டங்கள் நடைபெறும்.

ராணுவத்தளகர்த்தர் வீட்டைத் தகர்க்கச் சதி

12 பேர் கைது

கெய்ரோ, நவ. 27

எகிப்திய ராணுவத்தளகர்த்தர் வீட்டைத் தகர்க்கச் சதி செய்ததாக 12 ராணுவ உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் கமியுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறார்கள். [ராய்ட்டர்]

சாஞ்சி விஹாரை அஸ்திவாரக் கல் நாட்டு விழா

உலக பௌத்தர்களுக்கு முக்கியமான தினம்

போபால், நவ. 27

மகாபோதி சங்கத்தினர் மன்னிலையில் டிசம்பர் 27-ம் தேதியன்று போபால் மன்னர் சாஞ்சியில் பௌத்த விஹாரைக்கு அஸதிவாரக் கல் நாட்டுவார். உலக பௌத்தர்களுக்கு இது முக்கியமான தினமாகும். புத்த பகவானின் இரு சீடர்களான சாரிபுத்த, மஹாமொகலன இவர்களின் புனித அஸதிகளைப் பூஜிப்பதற்காக இந்த பௌத்த கோயில் கட்டப்படுகிறது. அன்று ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்வார்களாதலால் விசேஷ ரயில்கள் விடப்படும்

இப்புனித அஸ்திகள் லண்டன் ஆல்பர்ட் காட்சிசாலையில் வைக்கப்பட்டிருந்தன. பண்டித நேரு அரசாங்கம் அவைகளை இந்தியாவுக்குத் தருவித்தது. இப்பொழுது அவை இலங்கை பௌத்த மக்கள் தரிசனத்திற்காக இலங்கையில் இருந்துவருகின்றன. [அ-பிரஸ]

பிரிக்கப்படாத கடன் வகைகள்

பதினேழரை சத விகிதத்திற்கு பாகிஸ்தான் பொறுப்பு

புதுடில்லி, நவ. 28

இன்னும் பிரிக்கப்படாதிருக்கும் கடன் வகைகளில் பதினேழரை சத விகிதமுள்ள கடன்களைக் கொடுக்க பாகிஸ்தான் பொறுப்பேற்றுக் கொண்டது நீதத்தை இந்தியா செலுத்த வேண்டும். நேற்று நடைபெற்ற பிரிவினை சபைக் கூட்டத்தில் இம்முடிவு ஏற்பட்டது. [அ-பிரஸ்]

பர்மா

புதிய மார்க்ஸீயக் கட்சி

ரங்கூன், நவ 26

பர்மாவில் உதித்திருக்கும் புதிய கட்சியான 'மார்க்ஸீயலீக்' கிற்கு பர்மா உதவிப் பிரதமர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இக்கட்சியில் பர்மா சோஷியலிஸ்ட் கடசி, பொதுஜனத் தொண்டர் படை ஆகியன சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனுடைய நிர்வாக சபையில் பாசிஸ எதிர்ப்பு பொதுஜன சுதந்திர லீக்கின்பிரதம காரியதரிசியும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

'கமியூனிஸடுகள் ஆயுதம் பதுக்குகின்றனர்'

பர்மா பிரதமர் தக்கின் நூ பர்மா கமியூனிஸடுகள் பெருவாரி ஆயுதங்களைச் சட்டவிரோதமாகப் பதுக்கிவருகின்றனர் என்று ரங்கூன் ரேடியோமூலம் பொது மக்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்துள்ளார். இதுவரை மொத்தம் பதுக்கப்பட்டிருந்த 30 லட்சம் வெடிகுண்டுகள் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

பர்மா கமியூனிஸடுகளுக்கும் பாசிஸ எதிர்ப்பு லீகிற்கும் இடையில் உள்ள சம்பந்தம்பற்றிப் பேசுகையில் கமியூனிஸடுகளின் ஒரே நோக்கம் பாசிஸ எதிர்ப்பு லீக்மீது குற்றம் கூறுவதே எனக் குறிப்பிட்டார்.

ஆங்சான் கொலை வழக்கு

ஆங்சான் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஊசா சார்பில் லண்டனிலிருந்து ஒரு வழக்கறிஞர் வரவிருப்பதால் வழக்கை மேலும் ஒத்திப்போட வேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. [ராய்ட்டர்]

ஜெர்மனியரைச் சட்ட விரோதமாகக் கொண்டு செல்லல்

டென்மார்க்கில் எழுவர் கைது

லண்டன், நவ 27

ஸ்காண்டினேவியத் துறைமுகங்கள் மூலம் ஆர்ஜென்டைனுவுக்கு ஜெர்மனியர் பலர் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்படுவதாக டென்மார்க் தலைநகரான ஹோப்பன் ஹேகனில் இருந்து ஒரு செய்தி கிடைத்துள்ளது.

இது சம்பந்தமாக டென்மார்க் போலிஸாரால் எழுவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். [ராய்ட்டர்]

ரப்பர் ஏற்றுமதி குறைந்துவிட்டது

அக்டோபர் மாத நிலவரம்

கொழும்பு, நவ. 28

அக்டோபர் மாதம் இலங்கையிலிருந்து 20,140,075 ராத்தல் ரப்பர் ஏற்றுமதியாகியுள்ளது. செப்டம்பர் மாதத்தில் 22,014,037 ராத்தல் ஏற்றுமதியாயிற்று. ஆகவே செப்டம்பரை விட அக்டோபரில் ரப்பர் ஏற்றுமதி 1,873,962 ராத்தல் குறைந்துவிட்டது. சென்ற மூன்று மாத காலமாக அமெரிக்கா அதிகமாக ரப்பர் வாங்குகிறது. பிரிட்டன் கொஞ்சமாகவே ரப்பர் வாங்குகிறது.

தேசிய சேமிப்பியக்கம்

நீர்வேலி, நவ 26

உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் டி. முருகேசபிள்ளை தலைமையில் நடந்த ஓர் பொதுக் கூட்டத்தில் ஒரு சேமிப்புச் சபை நிறுவப்பட்டது.

சேமிப்பியக்கத்தின் உபயோகத்தைப்பற்றி முகாந்திரம் தியாகராஜா சங்கை ஏ. பிகனகரத்னம், எஸ் ஆர். குணரத்னம், எஸ. ஸ்ரீனிவாஸன் எம். ஏ. ஆகியோர்கள் பேசினார்கள்.

கமிட்டித் தலைவராக கிராமச் சங்கத் தலைவர் கே. தம்பையாவும், காரியதரிசியாக என். எஸ். முருகேசுவும் தெரியப்பட்டனர்.

அச்சுவேலி

அச்சுவேலி, நவ. 26

அச்சுவேலி, ஆவரங்கால் முதலிய இடங்களிலுள்ள பல பிரமுகர்களடங்கிய மகாநாடு ஒன்றை வடமாகாண சர்க்கார் ஏஜண்ட் ஆவரங்கால் மிஷன் பாடசாலையில் 24-11-47 அன்று கூட்டினார்.

அக்கூட்டத்தில் தேசிய சேமிப்பு சங்கங்கள் அமைப்பதுபற்றியும் ஒவ்வோர் பகுதிகளிலும் வசூலிக்கவேண்டிய தொகைபற்றியும் பேசப்பட்டது.

அச்சுவேலியிலிருந்து 60 ஆயிரம் ரூபாவும் ஆவரங்காலிலிருந்து 15 ஆயிரம் ரூபாவும் வசூலிக்கத் திட்டம் போடப்பட்டது.

இக்கூட்டத்தில் வலி கிழக்கு காரிய அதிகாரி திரு. முருகேசபிள்ளை அவர்களும், யாழ்பாணம் டிஸ்டிரிக்ட் தேசிய சங்க அமைப்பாளர் முகாந்திரம் திரு. ஸி. தியாகராஜாவும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தேசிய சேமிப்பு இயக்கம்பற்றிய பிரசாரம் செய்யும் பொருட்டு டிஸம்பர் 6-ம் தேதியன்று அச்சுவேலியில் ஓர் பொதுக்கூட்டமகூட்டுவதென அறிவிக்கப்பட்டது. (ந-நி)

துண்டாடப்பட்டிருக்கும் ஜெர்மனி

ஒன்றுபடுத்த சோவியத் முயற்சி

லண்டன், நவ. 27

லண்டனில் நடக்கும் அயல்நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் சோவியத் பிரதிநிதி மொலட்டோவ் ஜெர்மனியில் ஒரே மத்திய அரசாங்கம் நிறுவி அதனையே ஜெர்மன் சமாதான உடன்படிக்கையை ஏற்கும்படி செய்ய வேண்டுமெனப் பிரேரிப்பார் எனத் தெரிகிறது.

இப்போது துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஜெர்மனி இந்த சோவியத் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஒன்றுபடுத்தப்பட்டுவிடும். [ராய்ட்டர்]

இந்தியாவில் இறக்குமதி தடை

பிரிட்டனின் தவிப்பு!

லண்டன், நவ. 27

பிரிட்டனின் ஏற்றுமதித் திட்டத்தின்படி அங்கு இவ்வருடம் உற்பத்தி செய்யப்படும் 20 லட்சம் சைக்கிள்களில் 14 லட்சம் சைக்கிள்களை ஏற்றுமதி செய்தாகவேண்டும். எல்லா நாடுகளையும் விட இந்தியாவே அதிகமான சைக்கிள்களை வாங்கும் நாடு. ஆனால் இந்தியா ஸ்டெர்லிங் பிரதேசங்களிலிருந்து முக்கியமான சாமான்களைத் தவிர மற்ற சாமான்களின் இறக்குமதியைத் தடை செய்து செப்டம்பர் மாதமே உத்தரவு பிறப்பித்துள்ளனர் இதனால் பிரிட்டனின் சைக்கிள் ஏற்றுமதித் திட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. (ராய்ட்டர்)

சர்வகலாசாலை கோர்ட்டுக்கு பிரதிநிதிகள்

கொழும்பு, நவ 29

நேற்று பிரதிநிதிகள் சபை கூடிய போது, கீழ்க் கண்டவர்கள் இலங்கை சர்வகலாசாலைக் கோர்ட்டுக்கு அங்கத்தினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- திரு ஸி. சுந்தரலிங்கம், டாக்டர் என். எம். பெரேரா, திரு பீட்டர் கெனமன், திரு ஜீ ஜீ பொன்னம்பலம், திரு எம். டி. பண்டா, திரு வி. டி. நாணயகார.

வரவு செலவுத் திட்ட மசோதா

கொழும்பு, நவ 29

நேற்று பிரதிநிதிகள் சபை பகல் 10 மணிக்குக் கூடியது. நிதி மந்திரி ஜே ஆர். ஜெயவர்த்தனா 1947-48-ம் வருடத்திய உத்தேச வரவு செலவுத் திட்ட மசோதாவைப் பிரேரேபித்தார் இலாகா இல்லாத மந்திரி திரு ஆர். எஸ். எஸ். குணவர்த்தனா பிரேரணையை ஆதரித்தார். வரவு செலவுத் திட்டம் முதல்தடவையாக வாசிக்கப் பட்டது. திங்கட்கிழமை பிற்பகல் சபை கூடும்போது இம்மசோதா இரண்டாம்தடவையாக வாசிக்கப்படும்.

எகிப்துக்கு இந்திய ஸதானிகர்

புதுடில்லி, நவ. 27

டாக்டர் சையத் ஹுசைன் எகிப்துக்கு இந்தியாவின் ஸதானிகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (அ-பி)

ரப்பர் தோட்ட நிர்வாகம்

அரசாங்கத்தின் தோல்வி

உற்பத்தி குறைவு, உற்பத்தி செலவு அதிகம்

கொழும்பு, நவ. 29

அரசாங்கம் கைப்பற்றி நிர்வகிக்கும் ரப்பர் தோட்டங்கள் சம்பந்தமாக ரப்பர் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும்படி நிலக் கமிஷனரை விவசாய மந்திரி கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அது சம்பந்தமாக நிலக்கமிஷனர் விரிவானதோர் அறிக்கை தயாரித்து வருவதாகத் தெரிகிறது. அரசாங்க ரப்பர் தோட்டங்களில் உற்பத்தி குறைவாய் செய்யப்படுகிறதென்றும் ஆனால் உற்பத்திக்கு ஆகும் செலவு உற்பத்தி விற்றனையில் கிடைக்கும் வரவைவிட குறைவாக இருக்கிறதென்றும், ஆதலால் அரசாங்கம் இந்த முயற்சியில் மேலும் தலையிட்டு மேலும் ரப்பர் தோட்டங்களை வாங்குவது உசிதமில்லையென்றும் நிலக் கமிஷனர் அபிப்பிராயப்படுவதாகவும் தெரிகிறது.

எகிப்திலிருந்து வரும் அரிசி

ஐந்து வார காலம் முடக்கப்படும்

கொழும்பு, நவ. 29

எகிப்தில் காலரா நோய் பரவியிருப்பதால் அங்கிருந்து வந்து இலங்கையில் இறக்குமதியாகும் அரிசியை 5 வாரகாலம் முடக்கி வைத்து அதன்பிறகே விநியோகம் செய்ய அதிகாரிகள் நிச்சயித்திருப்பதாகத் தெரிகிறது.

தோட்ட முதலாளி மீது ரூ. 30 அபராதம்

மட்டக்களப்பு, நவ. 27

மாங்கேணியில் உள்ள ஒரு தென்னந் தோட்ட முதலாளி தம கீழ் வேலை பார்த்த தொழிலாளிகளின் ஜாபிதாவை வைத்திருக்கவில்லை. இதுசம்பந்தமாக அவருக்கு இரு தடவை தொழில் பகுதியினர் எச்சரிக்கை செய்துள்ளனர். அதன் பின்னரும் அவர் ஜாபிதா வைத்திருக்கத் தவறியதனால் அவர் மீது ரூபா 30 அபராதம் விதிக்கப்பட்டது. மேற்படி தோட்ட முதலாளியின் பெயர் கே. கந்தையா என்பதாகும். (ந-நி)

நிந்தவூர் சோனகர் ஹில்ரிய்யா சங்கம்

மட்டக்களப்பு, நவ. 27

இச் சங்கத்தின் முதலாவது வருடப் பொதுக் கூட்டம் 23-11 47ல் "ஹில்ரிய்யா குர்ஆன் பாடசாலை" மண்டபத்துள் கூடிற்று. கூட்டத்திற்கு மௌல்வி ஜனாப் எஸ். எல். எம். இஸ்மாயில் தலைமை வகித்தார் உதவியோகஸதர் தெரிவுக்குப் பின்னர் ஜனாப் ஏ. முகமது தம்பி ஆலிம் "குர்ஆன்" பாடசாலை ஆசிரியராக நியமிகப்பட்டார். இச் சங்கத்தை அகில இலங்கைச் சோனகர் சங்கத்தின் கிளைச் சங்கமாகப் பதிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (கடிதம்)

கொழும்பு. நவ. 28

சோனகர் இஸ்லாமிய கலைச் சங்கததின் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது டாக்டர் எஸ். ஏ. இமாம் "சமூக அமைப்புபற்றி இஸ்லாமிய கருத்து" என்ற விஷயமாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திரு. ஏ. எம். ஹமீத் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

மட்டக்களப்பில் தமிழ் காங்கிரஸ் கொடி

"நேற்று (25-11-47) மட்டக்களப்பில் உணர்ச்சி உள்ள தமிழர்கள், தமிழ்க் காங்கிரஸின் கொடிகளை எங்கும் பறக்கவிட்டு அதன் சின்னங்களை வலது புறமார்பில் தரித்துக்கொண்டு நின்றனர்."

இவ்வாறு மட்டக்களப்பில் இருந்து ஒரு நிருபர் இன்று "சுதந்திரன்" பத்திரிகைக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஹாவனா மகாநாடு

ஹாவனா, நவ. 26

ஹாவனாவில் உலக வர்த்தக மகாநாடு ஆரம்பமாயிற்று 61 நாடுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். திரு. ஜி. ஸ். எஸ். கொரியாவும், திரு. ஏ. மகாதேவாவும் இலங்கையின் பிரதிநிதிகளாக விஜயம் செய்திருந்தனர். [ராய்ட்டர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனகரி மக்கள் படும் கஷ்டம்

ஆஸ்பத்திரி, தபால், ரஸ்தா வசதிகள் மோசம்

பாழடைந்த குளங்களைத் திருத்தினாலும் பயனுண்டு

தென்மராட்சிப் பிரதிநிதி கூறும் விவரம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி, நவ. 29

தென்மாட்சிப் பகுதிப் பிரதிநிதியாகிய திரு வேலுப பிள்ளை குமார சுவாமி, சமீபத்தில் தமது தொகுதியாகிய பூன கரிக்குச் சென்று திரும்பிய பொழுது "சுதந்திரன" நிருபருக்குப் பின்வருமாறு தெரிவித்தார்:-

"பூனகரிப் பகுதி மக்கள் மலேரியா காத்தால் கஷ்டப்படுகிறார்கள். ஆங்கு ஒரு நல்ல ஆஸ்பத்திரி இல்லை. உள்ள ஆஸ்பத்திரியிலும் ஒரு அப்போதிக்கரிதான் இருக்கின்றார். நோயாளிகளுக்குப் போதிய படுக்கை வசதிகள் இல்லை. நோயாளிகள் கட்டில்களுக்குக் கீழேயும் படுத்திருப்பதை நான் கண்ணாரக் கண்டேன். வைத்திய உத்தியோகத்தர்களுக்குக் கூட இருக்கத் தக்க வீட்டு வசதியில்லாது தவிக்கின்றனர்"

தொடர்ந்து திரு குமார சுவாமி சொன்னதாவது:-

"பூனகரி, துணுக்காய்ப்பற்றில 5000 மக்கள வசிக்கின்றனர். அதன் நிலப்பரப்போ 370 சதுர மைல் விஸ்தீரணமாகும். முழுவதும் விவசாய பூமி, இங்கு ஒரு கருமாதிகாரிதான் கருமங்கள் ஆற்றுகின்றார். இப்பிரதேசத்தில் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்றால் அரசாங்கம் உடனே குளங்கள் அமைக்க வேண்டும். ஆங்கு 50 குளங்கள் வரையில் உண்டு அவை பாழடைந்துள்ளன, அவை திருத்தியமைக்கப்பட்டாலே போதுமானதாகும்.

"பூனகரித் துறைமுகத்திலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள வன்னேரி என்ற குளம் மிகப் பெரியதாகும். இதை அரசாங்கம் திருத்த வேண்டும், இப்முறை 7000 ஏக்கர் வயல் நிலத்தில் மழையின்மையால் பயிர்கள் எரிந்துபோய் விட்டன ஏழைக் கமக்காரர்கள் தம் வயல்களையே சீவியத்திற்குக் காத்திருப்பவர்களாவர். ஆகவே எத்தனை கஷ்டங்களுக்கு அவர்கள் ஆளாகவேண்டியிருக்குமென்பது சொல்லத் தேவையில்லை.

போக்குவரத்து வசதி

"இப்பூனகரி முழுவதற்கும் இரண்டு தபால் கொடுப்பவர்கள் தான் இருக்கிறார்கள். இப்படி அரசாங்கத்தால் கவனிக்கப்படாத தேசம் வேறு எங்காவது உண்டா? இன்னும் யாழ்ப்பாணத்திலிருந்து பூனகரி துணுக்காய்ப் பகுதிக்குச் செய்திகள் எட்டுவதற்கு இரண்டு நாட்களாகலும். ரோடுகள் யாவும் ஒரே குழிகள்தான் மன்னார் - பூனகரி ரோடும் பூனகரி பரந்தன் ரோடும் மிகப் பிரதானமானவை. இவை உடனே திறக்கப்பட வேண்டும்.

"இவ்விஷயங்களை நான் அந்த மந்திரிகளுடன் பேசி வந்திகள் ஏற்படுத்த என்னாலானமட்டும் முயலவேன்" என்று திரு குமாரசுவாமி கூறிமுடித்தார்.

பைசிக்கிள் திருடிய 12 வயதுச் சிறுவன்

தண்டனை 6 பிரம்படி

சாவகச்சேரி, நவ. 27

மீசாலை தெற்கு சங்கரப் பிள்ளை கணேசமூர்த்தி என்னும் 12 வயதுச் சிறுவன் சாவகச்சேரி மார்க்கெட்டில் நுணாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி இராமசாமி என்பவருடைய பைசிக்கிளை களவாடிய குற்றத்திற்கு இன்று சாவகச்சேரி கோர்ட்டில் 6 பிரம்படி தண்டனை விதிக்கப் பெற்றான். [ந-நி]

குடிவெறியினால் குழப்பஞ் செய்தவருக்கு 1 மாதச்சிறை

பொய் சாட்சியம் சொன்னவருக்கு ரூ. 50 அபராதம்

சாவகச்சேரி, நவ. 27

மீசாலை வடக்கு வயிரமுத்து நாகலிங்கம் என்பவர் நவம்பர் மாதம் 8-ம் தேதி குடித்து விட்டு சாவகச்சேரி மார்க்கெட்டில் குழப்பஞ் செய்தார் என்ற குற்றத்திற்கு சாவகச்சேரி நீதிபதி எதிரிக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார் எதிரி சார்பாக சாட்சியம் சொல்ல வந்த முருகர் என்பவருக்கு பொய் சாட்சி சொன்ன குற்றத்திற்கு ரூ. 50 அபராதமும் விதிக்கப்பட்டது. (ந-நி)

குறைந்த கட்டணம், நிறைந்த பரிசு.
லெகுவான விடை.
கலை அறிவுப் போட்டி நிர். 2
ரொக்கப் பரிசு ரூபாய் 1650-00
முதற் பரிசு பெறும் அனைவருக்கும் பவுன்டன் பேனா
சரியான விடை தெரிந்தெடுத்தல் மிகப் புதிய முறை
முடிவு திகதி 6-12-47
இலவசக்கூப்பன்களுக்கு உடனே எழுதுக
கலை அறிவுப் போட்டி நிலையம்
பருத்தித்துறை (Point-Pedro)Ceylon)

சட்டவிரோதமாக நெல் கடத்தியமை

6 மாத கடுழியச் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த பி.எஸ். பஸ்தியாம்பிள்ளை என்பவர் மீது சட்டவிரோதமாக கல்கமுவையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நெல் கொண்டு சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

விசாரணையின்பின் யாழ்ப்பாண நீதிபதி அவர்மீது மோதகடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

திரு பஸ்தியாம்பிள்ளை ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து இளைப்பாறியுள்ளவராவர். [ந-நி]

பிள்ளைகளைக் கிணற்றில் தள்ளிய பிதா

சாவகச்சேரி, நவ. 27

உசன் வாசியாகிய இராமலிங்நாருணபிள்ளைஎன்பவர்தன்னுடைய குழந்தைகள் இரண்டையும் கிணற்றில் தூக்கிப்போட்ட குற்றத்திற்கு எதிரியை சாவகச்சேரி நீதிபதி 100 ரூபாவில் 3 வருட நல்நடத்தைப் பிணையில் விட்டிருக்கிறார். [ந-நி]

யூகோ-பல்கேரிய ஒப்பந்தம்

சோபியா, நவ. 26

பல்கேரியாவுக்கும் யூகோஸ்லேவியாவிற்கு மிடையில் ஒரு நட்பு ஒப்பந்தம் செய்யப்படவிருக்கிறது இது நாளை பல்கேரியாவில உள்ள வர்ணாவில் வைத்த கை எழுத்திடப்படும்.

சிங்கக் கொடி பறக்கவிடாததால் சீற்றம்

திரிகோணமலை நகரசபைத் தலைவர் மீது பாய்ச்சல்

சிங்களவரின் வரிகொடா இயக்கம் ஆரம்பமாகும் எனமிரட்டல்

தமிழ் முஸலிம் இல்லங்கள் சிங்கக் கொடியைப் பகிஷ்கரித்தன

திரிகோணமலை, நவ. 28

சமீப பாராளுமன்றத் திறப்பு விழாவின்போது திரிகோணமலை நகரசபை சிங்கக் கொடியைப் பறக்கவிடவில்லை இதன் காரணமாக 25-ம் தேதி மாலை நடந்த ஓர் பொதுக்கூட்டத்தில் திரு. டபிள்யூ. பெரேரா என்பவர் "நகரசபை நமக்கு வேண்டியதில்லை" என்றும் "சிங்கள மக்கள் நகரசபைக்கு வரிகளைச் செலுத்தக்கூடாது" எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் யூ. என் பியைச் சேர்ந்த காப்டின் கனகசிங்கம் சமுகமாய் இருந்து சிங்கக் கொடியை ஏற்றிவைத்தார்.

கூட்டம்ஆரம்பமாவதன் முன் சிங்கள மக்களின் சிங்கக்கொடி ஊர்வலமொன்று வீதிகளூடாக வலம் வந்து, கூட்டம் நடந்த பெரிய மைதானத்தை 5 மணி அளவில் அடைந்தது.

திரு. கனகசிங்கம் தமிழர் சிங்களவருடன் ஒத்துழைக்கவேண்டும் என்று பேசினார்.

திரு ஜயார்ஜ் கொத்தலாவல இக்கூட்டத்தில இரு தடவைகள் பேசினார். அடுத்த நாலு வருடங்களுள் திரிகோணமலையில் சிங்களஜாதி செத்தொழியும் என்றும், யாழ்ப்பாணத் தமிழர் தமது சமூகத்தினருக்கு அதிகரித்த உத்தியோகம் பெறுதத் தரமுயலும்போது சிங்கள மக்கள் சமூகத்தினரை உத்தியோகங்களில இருந்து நீக்கிவிட முயன்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நகரசபைத் தலைவர் திரு. எஸ் எம். மாணிக்கராஜா நகரசபைக் கட்டிடத்தில் சிங்கக் கொடியைப் பறக்கவிடாததைப் பல பேச்சாளர் கண்டித்தனர்.

இவ்விழாவை முன்னிட்டு சின்ன பஜார்ப் பகுதியிலும் இதர இடங்களிலும் உள்ள சிங்கள வீடுகளில் மட்டும் சிங்கக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தன.

முஸ்லிம் பொதுஜனங்களோ தமிழ் பொதுஜனங்களோ கொடிகள் பறக்கவிடவில்லை.

முழுத் திரிகோணமலையிலும் காப்டின் கனகசிங்கம் வீடுமட்டுமே சிங்கக்கொடியைப் பறக்கவிட்டிருந்த தமிழிலமாகும். (ந-நி)

டில்லி கவர்னர் ஜெனரல் மாளிகையில்பாகிஸ்தான்பிரதமர்

மவுண்ட்பேட்டனுடன் பேசுகையில் காந்தி ஜி பார்த்தார்!

இந்தியா-பாகிஸ்தான் சமாதானத் திட்டம் உருவாகிறது

புதுடில்லி, நவ 27

மகாத்மா காந்தி இன்றைய பிரார்த்தனை கூட்டத்தில் கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டார்:-

லார்டு மவுண்ட்பேட்டனும் இந்திய பிரதம மந்திரியும் பாகிஸ்தான் பிரதம மந்திரியும் மற்றும் சில மந்திரிகளும் கூடிப் பேசினார்கள். கலகத்தால் சின்னாபின்னப்பட்டுள்ள நமது நாட்டில் (இந்தியா-பாகிஸ்தான்) அமைதி ஏற்படும் வரையில் ஏதோ சில முடிவுகள் செய்திருப்பதாகத் தெரிகிறது. நான் லார்டு மவுண்ட்பேட்டனைச் சந்திக்கச் சென்றபோது அங்கு பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகான் லார்டு மவுண்ட்பேட்டனுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். லியாகத் அலிகான் சர்க்கார் மாளிகையில் விருந்தினராகத் தங்கியிருக்கிறார். அப்பொழுதுதான் இந்தசமாதானத் திட்டம் பற்றி எனக்குத் தெரிய வந்தது.

அட்லிக்குத் தகவல்

இன்று பாராளுமன்றத்தில் பண்டித நேரு பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீர் சம்பந்தமாக அக்டோபர் 25-ம் தேதியை நான் பிரிட்டிஷ் பிரதமர் அட்லிக்கு தந்தி அனுப்பினேன். அவரும் பதிலனுப்பினார். அதற்குப்பின் கடிதப் போக்குவரத்துகளும் கிடைபெற்றன. ஜூனாகத், காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தானுடன் நேசபான்மையான முறையில் சமரசப் பேச்சு நடந்த இந்திய சர்க்கார் எப்பொழுதும் தயார். பிரஞ்சு இந்திய பிரதேச மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப பிரஞ்சு இந்திய பிரதேசங்களின் நிர்வாகத்தை அமைப்பதுபற்றி ஆலோசிப்பதாக பிரஞ்சு சர்க்கார் இந்திய சர்க்காருக்கு உறுதி கூறியிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள போர்ச்சுகல் பிரதேசங்கள் பற்றியும் இந்திய சர்க்கார் கவனம் செலுத்திவருகிறார்கள்.

டாக்டர் அம்பேத்கார் வேண்டுகோள்

பாகிஸ்தானிலும் ஹைதராபாத் சமஸ்தானத்திலும் தாழ்த்தப்பட்ட ஹிந்து மக்கள முஸலிம் மதத்திற்கு பலாத்காரமாக மாற்றப்படுவதால் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் இந்தியாவுக்கு வரும்படி இந்திய சர்க்கார் சட்ட மந்திரி டாக்டர் அம்பேதகார் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

20 ஆயிரம் பவுண் கட்டிடத்தில் விருந்து

லண்டன், நவ. 27

லண்டனிலுள்ள பாகிஸ்தான் ஹை கமிஷனர் தாங்கள் குடியிருக்க 20 ஆயிரம் பவுண் கொடுத்து வாங்கிய கட்டிடத்தில் ரஹிமதுல்லா தம்பதிகள் பிரபலஸ்தர்களுக்கு ஓர் விருந்தளித்தார். இந்தியா ஹைகமிஷனர் கிருஷ்ணமேனன், பிற தேச ஸ்தானிகர்கள், பிரிட்டிஷ் சர்க்கார் மந்திரிகள் முதலியோர் விஜயம் செய்திருந்தனர்.

பாதுகாப்புத் திட்டம்

புதுடில்லி, நவ, 27

இந்தியா பாராளுமன்றத்தில் இன்று பட்டாபி சீதாராமையா, தேசியப் படையொன்று கிரட்டவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். தற்பாதுகாப்புக்கு இப் படை வேலை செய்யுமென்று தெரிவித்தார். பாதுகாப்பு மந்திரி சர்தார் பலதேவ்சிங் பிரதேசவாரியாக படைகள் திரட்ட ஏற்கனவே சர்க்கார் திட்டம் வகுத்து வருகிறார்கள் என்று தெரிவித்ததன்பேரில் தீர்மானம் வாபஸ் வாங்கப்பட்டது.

ஷேக் அப்துல்லா கர்ஜனை

காஷ்மீர் சிங்கம் ஷேக அப்துல்லா இன்று பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- பொ ளாதார நிலைமை சம்பந்தமாக காஷ்மீர் இந்தயாவின உதவியைப் பெறவேண்டியதிருப்பதால் காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்படுவதுதான் சிறந்த மார்க்கம், பண்டிட்நேருவுக்காகவும் காந்திஜிக்காகவும் நாம் இந்தியாவுடன் சேரவில்லை. வறுமைக் கொடுமையால் காஷ்மீர் மக்கள் அழிவதனின்றும் பிழைத்துக் கொள்ளவே காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்துள்ளது. காஷ்மீர் மீது படையெடுக்கத்து பாகிஸ்தானே காஷ்மீரிகள் கடைசி மனிதனின் ரத்தம் சிந்தும்வரை சுதந்திரத்திற்காக பாகிஸ்தானை எதிர்த்துப் போராடுவார்கள். இந்தியாவில் முஸலிம் தேசியத் தொண்டர் படை, ராஷ்ட்ரீய சுயம் சேவாச் சங்கம் ஆகிய மத அடிப்படையான தொண்டர் படை இருப்பது பொருத்தமல்ல. இந்தியா மதத்தையன்றி மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசாங்கத்தையுடையது. மதத் தவேஷிகளுக்கு அங்கு இடமே கிடையாது. இந்திய மக்கள் ஒவ்வொருவரும் அபாயத்திலுள்ள காஷ்மீரத்திற்கு உதவி செய்யவேண்டும்.

மீர்பூர் பற்றி எரிகிறது

ஜம்மு, நவ. 27

இந்தியத் துருப்புகள் கோடலியை மீட்கும்போது அதிருந்து 20 மைல தூரத்திலுள்ள மீர்பூர் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. படையெடுத்துவந்து அதை முற்றுகையிட்டிருந்த எதிரிகள் நகரை நாசமாக்குகின்றனர்.

அகதிகள் ரயில் விபத்து

லாகூர், நவ. 27

கிழக்குப் பஞ்சாப்பிலிருந்து மேற்குப் பஞ்சாப்பிற்கு முஸ்லிம் அகதிகளை ஏற்றிச் சென்ற ரயில் திங்கட்கிழமையன்று அம்பாலாவுக்கருகில் தண்டவாளத்தைவிட்டு இறங்கி விபத்துக்குள்ளானதால 200 அகதிகள் கொல்லப்பட்டனர்.

லொறி மோதி ஒருவர் மரணம்

இன்னொருவருக்குக் கால் முறிந்தது

கொழும்பு, நவ. 29

ஸ்கின்னர்ஸ ரோட்டில் தட்டாரத் தெரு சந்திக் கருகில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் மருதானையிலிருந்து வேகமாய் வந்துகொண்டிருந்த லொறி, ரோட்டருகே சென்றுகொண்டிருந்த இருவர் மீது மோதியது ஒருவர் ஸ்தலத்திலேயே மாண்டார், மற்றவருக்குக் கால் முறிந்து படுகாயமடைந்தார் போலிஸார் ஸ்தலத்திற்கு வந்து ஆபத்தில் சிக்கியவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர்.

ஐசிங் சுகர்
இலங்கையில் முதல்தரமானது
குயின் (ராணி) மார்க்.
இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.
7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00
எங்கள் ஸடோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸடிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.
குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அனுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.
தந்தி "Confection" போன்: 4511

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!
புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.
உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.
கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.
ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.
ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.
ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-
லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள்.
இன்னும் பலவித சாமான்கள்,
கவனிப்பு:-
அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.
O. N. ASSEN MOHAMED & Co.,
3, Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

விற்றோ
பழ ரச பானங்கள்!
1. பானுடன் கலந்து பாவிக்கக்கூடிய பழரசம் எது? விற்றோ.
2. குடிவகைகளுடன் கலந்து உடம்பு போஷணைக்குப் பாவிக்கும் பழரசம் எது? விற்றோ.
3. பழத்தண்டு, பழச்சார், ஐஸ்கிரீம் இவைகளுடன் கலந்து நல்ல வாசனையையும் ருசியையும் கொடுக்கும் பழரசம் எது? விற்றோ.
4. புடிங், ஜெல்லீஸ, கேக்ஸ, ஜாம்ஸ் இவைகளுடன் கலந்து ருசியைக் கூட்டும் பழரசம் எது? விற்றோ.
5. தண்ணீருடனாவது, சோடாவோடாவது கலந்து தாகம் தீர்க்கும் மனோகரமான பழரசம் எது? விற்றோ.
குளிர்ந்த பானங்கள்:
பொருட்டோ ஒரேஞ்பார்லி லெமன்பார்லி ஒரெஞ்சிறன்
ஸ்ட்ரோபெறி ஜிஞ்சர்ஏல் ஜிஞ்சர்பீயர் ரூபைபெறி
செறி பயின்ஆப்பிள் கோலாசம்பேயின் கவிட் வினோ
எல்லாரும் விற்றோ புரோடெக்ஸ் குளிர்ந்த பானங்களையே உங்கள் வீடுகளில் வாங்கிப் பாவியுங்கள்!
சோல் ஏஜண்ட்ஸ்:- சிவராணி அன் கோ,
20, அம்மன் ரோடு, யாழ்ப்பாணம்.
தயாரிப்பவர்கள்:-
விற்றோ புரோடெக்ஸ் கம்பெனி லிமிடெட்.,
தெஹிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாணத்தில் 2000 ஏக்கர் வயற்செய்கை சேதம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதால் கெதியில் பதில் தரவேண்டும் என்றும் கேட்டிருந்தார். ஆனால் 28-ம் தேதி வரைக்கும் மந்திரி ஒரு பதிலும் அளிக்கவில்லை ஒருவேளை விவசாய மந்திரியும் உணவு மந்திரியும் ஆலோசிக்கிறார்கள் போலும்! பழைய குடியேற்றநாட்டு அரசாட்சியில் இப்படியான அவசர விஷயங்களுக்கு உடன் மான்யம் ஒதுக்கப்படும். இதற்காக நாம் நெடுகலும் குடியேற்றநாடாக இருக்கவேண்டுமென்று கூறவில்லை. ஆயின் ஒரு வேலை தெரியாத நிலைமையைச் சமாளிக்கமுடியாத அரசாங்கத்தில் இப்படி விஷயங்கள்தான் நடைபெறுகின்றன என்பதைத்தான் நான் கூறுகின்றேன்.

தமிழர்மீது வேற்றுமையா?

"இத்துடன் நான் மந்திரிகள் வட மாகாணத் தமிழர் மீது காட்டும் வகுப்புத் துவேஷக் குற்றச்சாட்டையும் கூறவேண்டியிருக்கிறது. உண்மையில் தமிழர்மீது வகுப்புத் துவேஷம் காட்டுகிறார்களதான்!

தற்காலிக குமாஸதாக்கள்

"சென்ற ஜூன் மாத வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தற்காலிக அரசாங்க குமாஸ்தாக்கள் ஏன் வேலைக்கு மீண்டும் அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை? எங்கள் மந்திரி சபையினரின் பிற்போக்கைத்தான இது காட்டுகின்றது.

பேராசிரியர் பேக்மன் பேசுகையில் இச்சபையில் தமது மாணவர்கள் பலர் அங்கத்தினராயிருப்பது தமக்கு பெருமையளிப்பதாகவும் யாழ்ப்பாண தொகுதி அங்கத்தவர் செய்த பிரசங்கம் மனதைக் கவரக் கூடியதாக இருந்ததென்றும் கூறினார். இடைநேர வேளைக்காக மத்தியானம் 12 மணியுடன் சபை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை பிற்பகல் 1-30 மணிக்கு கூடியபோது பேராசிரியர் பேக்மன் தொடர்ந்து பேசினார். அவர் இச்சபையில் கவர்னரது பிரசங்கத்தின் மீது விவாதம் நடந்த முறை பாராட்டக்கூடியதென்றும் காமன்ஸ சபையிலும் மன்னரின் பிரசங்கத்தின் மீது இதே முறையிலேதான் விவாதம் நடத்தப்படுவது வழக்கமென்றும் கூறிவிட்டு திருத்தப் பிரேரணை பற்றி பேசுகையில தேசத்தின் பொருளாதாரப் பிரச்னை பற்றி மந்திரி சபை நடவடிக்கை எடுக்க ஆலோசித்துள்ளதாகவும் சமூக சேவைக் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விஷயங்களை அமுலுக்கு மந்திரி சபை கொண்டுவருமென தாம் நம்புவதாகவும் இத்திட்டவேலைகள் நடைபெற்றால் தேசத்தின் பொருளாதார திட்டம் வகுப்பது சுலபம் என்றும் கூறினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

தேச மக்களின் சுபிட்சவாழ்வுக்கு வழிகோலும் ஒரு கொள்கைபடி திட்டதை தயாரிக்கவேண்டியது மந்திரி சபையின் பொறுப்பாகும் நிலைமை இவ்வித மிருக்கையில் நாணய செலாவணிப் பெருக்கத்தைத் தடுத்து வாழ்க்கைச் செலவைக் குறைக்க மந்திரி சபை நடவடிக்கை எடுக்காதென நினைக்க முடியாதுள்ள மார்க்கெட்டை அரசாங்கம் ஒழித்துக் கட்டினால் தேசத்துக்கு அது ஒரு பெரிய சேவையாகும். வெளி நாடுகளிலெல்லாம் கள்ள மார்க்கெட்டுகளை ஒழிக்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

லஞ்சம் - ஊழல்கள் முதலியவற்றை இலலாமற் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பஸ போக்குவரத்தை தேசியமயமாக்குவது பற்றி கூறப்பட்டுள்ளது. பஸ போக்குவரத்தை தேசிய மயமாக்குவது நல்லதுதான். ஆனால் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் பஸ போக்கு வரத்துகள் நடத்தப்படவேண்டும். இல்லாதுவிட்டால் இம் முயற்சி பயனளிக்க மாட்டாது.

இலவசக் கல்வி

இலவசக் கல்வி திட்டத்தில் முதலில் இலவசப்போதனையை மட்டும் அமுல் நடத்திப்பார்க்க வேண்டும். இந்த முதல் பரீட்சையில் வெற்றி காண்பின் படிப்படியாக மற்ற விஷயங்கள் உணர, புத்தகங்கள் முதலியன இலவசமாக அளிக்கப்படுவது பற்றி கவனிக்கலாம்.

ஜனநாயக ஆட்சி

சோவியத் ஜனநாயக முறையில் நடத்தப்படும் அரசாங்கத்தில் ஒரு கட்சிதான் இருக்க முடியும். அங்கு நடத்தப்படும் ஆட்சி ஒரு குழுவினரால் கட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இந்த நாட்டில் நாங்கள் அனுபவிக்கும் ஜனநாயகத்துக்கும அங்குள்ள ஜனநாயக முறைகளுக்கும் வித்தியாசங்கள் உள்ளன. எல்லாக் கட்சிகளையும் ஒரு கட்சி ஒடுக்கி நடத்தும் ஆட்சிதான் அது.

திரு. வி. டி. நானயக்காரா பேசுகையில் தாம் யூ. என். பியில் சேர்ந்தது அக்கட்சி சோஷலிஸத்தை ஆதரிப்பதால்தான் என்றும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முறைகளைப் பின்பற்றுவதிலும் பார்க்க தங்கள் சொந்த முறைகளைப் பின்பற்றி நடப்பதுதான் எப்பொழுதும் சிறந்ததென்றும் கிடைக்கப்போகும் சுதந்திரம் பூர்ண பொறுப்பாட்சியைக் கொடுக்கும் சுதந்திரமே யென்றும் எந்த தேசத்துடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள இலங்கைக்கு முடியுமென்றும் இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென கவர்னர் பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளது ஒரு நல்ல சகுனமென்றும் எல்லோரும் ஒற்றுமையாக சேவை செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

திரு. வி. டி. சுகததாஸ பேசுகையில், கல்வி வசதிகள் கடந்த 132 வருட காலங்களாக அவ்வளவுக்கு பயன் படுத்தப்படவில்லை யென்றும் இந்நிலை தொடர்ந்திருக்க விடப்படாதென்றும் கூறினார்.

திரு. லீலிப குணவர்தன பேசுகையில் சபையில் பிரதமர் தமது கட்சியின் திட்டத்தைப் பற்றி விளக்கமாக தெரியாததினால் சபையில் நடத்தப்பட்ட பிரசங்கங்கள் ஒழுங்கானமுறையில் நடக்கவில்லை யென்றும் இலங்கை சமசமாஜக் கட்சி - கமியூனிஸ்ட் கட்சி முதலியவை மீது பிரதமர் கொண்டுவந்த குற்றச்சாட்டுகளைப் பற்றியும் இப்பொழுதுள்ள மந்திரி சபை ஒரு குடும்ப தொடர்புடையோரால் நடத்தப்படுகிறதென்றும் இன்று பொது மக்களுக்கு பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரியும் கட்சியையே பொதுமக்கள் ஆதரிக்கின்றனர் என்றும் இப்பொழுதுள்ள மந்திரி சபையில் எல்லாச் சமூகத்துக்கும் தகுந்த முறைப்படி பிரதிநிதித்துவம் கணிக்கப்படவில்லை யென்றும் இப்பொழுதுள்ளது ஒரு கூட்டு மந்திரி சபையு மலலவென்றும் கூறினார்.

சமசமாஜக்கட்சி பற்றியும், ரஷியாவில மக்கள் சோஷலிஸத்திற்கு முன்னேறிச் செலவது பற்றியும் கூறிவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

சோவியத் ரஷ்யாவிலே மக்கள் சோஷலிஸ ஆட்சியை நிலைநாட்ட முன்னேறுவது போல இங்கும் சோஷலிஸ ஆட்சியை நிறுவுவதற்கு பிரதமரின் பிறந்த இடமான பொதுதளையிலே யுத்தம் நடக்கும் அந்த யுத்தம் தொடங்கலாகாதை வரைக்கும நடத்தப்படுபொது மக்கள் ஆத்திரமூட்டப்பட்டுள்ளனர். இலங்கையின் நற் பெயரைக் கெடுப்பதற்குதான் பொது பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. இதனால் இதற்கு முன் ஒரு பொழுதும் அனுஷ்டிதமாராத அதிகாரத்தை போலிஸார் அனுஷ்டிக்க இடமளிக்கப்பட்டது.

மேல் சபையில் நேற்று உள்நாட்டு மந்திரி பேசுகையில் பாதுகாப்புச் சட்டம் இன்னும் சில காலத்துக்கு திருத்தபடமாட்டாதென்று குறிப்பிட்டார். ஸர் ஒலிவர் குணத்திலகா பொது ஜன பாதுகாப்பு அதிகாரியாக அரசியலில் ஈடுபடத் தொடங்கியிருந்தார். இப்பொழுது உளுத்துப் போய் ஆழும் நிலையிலுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஆகானும் மற்றும் இந்திய சமஸ்தானாதிபதிகளும் செய்யும் தொண்டையே இவரும் செய்ய முயற்சிக்கின்றார்.

வகுப்புவாதம்

வகுப்பு வாதத்தை எந்த முறை கொண்டும் சமசமாஜக் கட்சி ஆதரிக்க மாட்டாது. வருங்காலத்தில் வகுப்பு வாதப் பிரச்னையை இலங்கை சமசமாஜக்க வேண்டியதாக இருக்கும்; இன்று மந்திரி சபை போகும் போக்கு வடக்கே வகுப்பு வாதத்தைப் பரப்புவதனை ஆதரிப்பதாகவே இருக்கிறது. இந்த வகுப்பு வாத தொற்று நோய் தொழிலாளரிடையே ஏற்படுவதைத் தடுக்க இலங்கை சமசமாஜக் கட்சி முயற்சிசெய்துவருகிறது.

பொருளாதார நெருக்கடி

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படப் போகிறதென்பதற்கு இப்பொழுதே அறிகுறிகள் தென்படுகின்றன. இதனால் தேசத்தில் அமைதி இன்மையும் குழப்பங்களும் அதிகரிக்கும். பொது மக்களின் எழுச்சியை இராணுவத்தினால் அடக்க முடியாதுபோய் விடும்.

இலங்கை சமசமாஜக் கட்சி பிரிட்டிஷ் மக்களுக்கு எதிரியாக இலலை. ஆனால் அவர்களுடைய ஏகாதிபதியப் போக்கையே நாங்கள் எதிர்க்கிறோம்.

அரசாங்க கட்சித் தலைவர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா பேசியதாவது:-

இலங்கை சமசமாஜக் கட்சியினரும் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியினரும் சர்வதேசியத்திலும்மார்க்ஸிஸத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள். இந்த மார்க்ஸிஸத்தை அடிப்படையாகக்கொண்ட கட்சிகளுடன் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ, இலங்கை இந்தியன் காங்கிரஸ ஆகிய கட்சிகளும் சேர்ந்துள்ளன. டிராஸ்கி கட்சியினர் ஸ்டாலின் கட்சியினருடன் சேரமாட்டார்கள். ரஷியாவிலும் இவ்விதமே.

இப்பொழுது எங்களுடைய நிலைமைகளில் துரிதமாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. சுதந்திரம் கிடைத்துவிட்டது. இது சம்பந்தமான (நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் முதலியனவற்றின்) தஸதாவேஜுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு

இந்தியாவும் பர்மாவும் தங்கள் தங்கள் தேச பாதுகாப்பில் சிரத்தை கொண்டுள்ளன. இலங்கையும் தனது பாதுகாப்பில் ஏன் சிரத்தை கொள்ளக் கூடாது.

ஒரு அரசியல் திட்டத்தை மாற்றியமைப்பது சுலபம். ஆனால் ஒரு தேசத்தின் அரசியலமைப்பை மாற்றிக்கொள்வது சுலபமான விஷயமல்ல. ஒரு தேசத்தின் பொருளாதாரத்தினை நினைத்தவுடன் மாற்றுவது சுலபமல்ல.

மூலதனத்தை தேசிய மயமாக்கும் பிரச்னையையே நாம் இப்பொழுது கவனிக்க வேண்டும். இதற்கு கூட்டுறவு இயக்கம் ஒரு ஆயுதமாகும்.

தேசத்தின் மக்களுக்கு பயனளிக்கக் கூடிய முறையில் வைத்திய சேவையைதிருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசத்திற்கு வேண்டிய தாதிப்பெண்களையும் மருத்துவப் பெண்களையும் பயிற்றி வைத்திய இலாகாவுக்கு எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன கிராமப் பகுதிகளில் அதிக வைத்திய சாலைகளைத் திறப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. வீட்டு நெருக்கடி, ஜல நெருக்கடி உள்ள இடங்களில் வீட்டமைப்புத் திட்டங்களும் ஜல விநியோகத் திட்டங்களும் அமுலுக்குக் கொண்டுவரப்படும் அடுத்த சில வருடங்களிமேற் கண்டவேலைகள் எடுக்கப்பட இருக்கின்றன. சமூகங்களின் முன்னேற்றத்தை - தேச முன்னேற்றத்தை பாதிக்கும் தீமைகளை ஒழிப்பதற்கு ஒத்துழையுங்கள்"

இதன் பின்னர் சபாநாயகர் திரு எஸ். ஜே. வி. செல்வ நாயகத்தால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணை மீது வாக்கெடுத்தார். திருத்தப் பிரேரணையை ஆதரித்து 39 வாக்குகளும் திருத்தப் பிரேரணையை எதிர்த்து 58 வாக்குகளும் கிடைத்தன. திருத்த தீர்மானம் தோல்வியுற்றது.

இதன் பின் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டிருந்த தீர்மானம் சபையில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. கவர்னரின் "சிம்மாசன" பிரசங்கத்திற்கு நன்றியாராட்டும் தீர்மானத்தினைசபைப் பிரதிநிதிகளில் இருவர் கவர்னருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுகூறினார்.

இத்துடன் அடுத்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிவரை சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

அரசாங்க பணமோசடி கண்டுபிடிக்கப்பட்டது

வாளிகளைக் கொடுத்தது கண்டிராக்டர் வேலையாம்

கொழும்பு நவ. 28

அரசாங்க இலாகாக்களுக்குஉபயோகிக்க வாங்கப்பட்ட தகர வாளிகள் சம்பந்தமாக அரசாங்க பணம் பல ஆயிரக்கணக்கில் மோசடி செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், இது சம்பந்தமாக பொக்கிஷ இலாகா விசாரணை செய்து வருவதாகவும் தெரிகிறது.

வாளிகள் கொடுப்பதாக கண்டிராக்ட் எடுத்த ஒருவர் 5 ரூத்தல்வாளிகளுக்குப்பதிலாக 2 ரூத்தல்நிறையுள்ள வாளிகளை ஒரு குமாஸதாவின் உதவியுடன் ஸடோரில் ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது. இவற்றுக்கு முதல் குறிப்பிட்டபடி 5 ரூத்தல் வாளிகளுக்குள்ள விலைப்படியே அவர் பணம் வாங்கியுள்ளதாகவும் தெரிகிறது. பொக்கிஷ இலாகா இதனைக் கண்டு பிடித்து இப்பொழுது விசாரணை நடத்தப்படுகிறது.

ஆசிரியருக்கு கடிதம்

தமிழர்களே விழிமின்!

ஐயா,

பிளாக்மார்க்கெட் வியாபாரிகளும், ஹோட்டல் முதலாளிகளும், கூலிக்கு மாரடிக்கும் நட்டி வக்கீல்களும் தமிழர்களின் வருங்கால நன்மையை உத்தேசிக்க கொழும்பு நகர மண்டபத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை (30-11-47) காலை 9-30 மணிக்கு கூட்டம் கூடுவதாக விளம்பரமிடப்பட்டிருக்கிறார்கள்.

தமிழன் ஏமாந்தவனல்லன். உண்மையில் இந்த நவக் கிரகங்களில் ஒரு நவக் கிரகமாவது தமிழர்களுக்கு சிங்கள மந்திரிகள் செய்த நன்மையை எடுத்துக்கூற முடியுமா?

தமிழன் ஒருபோதும் அடிமையாக இருக்கப் போவதில்லை, சேனநாயக்கா கும்பலுக்கு இலங்கை சொந்தமா? அல்லது இலங்கையர்களுக்கு இலங்கை சொந்தமா? ஒவ்வொரு ஜாதியும் பூரண சுதந்திரத்துடன் வாழ உரிமையுண்டு. தமிழ்க் காங்கிரஸே தமிழர்களின் உயிர் நாடி. அதன் சேவை என்றும் வேண்டும். அதற்காக என்ன தியாகம் செய்யவேண்டுமானாலும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தயாராக இருக்கிறார்கள். தமிழ்க் காங்கிரஸ தலைவர்களின் வழிகாட்டுதல்களையே எதிர் பார்த்திருக்கிறார்கள். தமிழரின் ஹல்ஸ்டாரப் விரோதியும் அவரது போலித் தமிழர்களுமா தமிழரின் தலை விதியை நிர்ணயிக்கப் போகிறார்கள்? கேவலம்! அடிமைப் புத்தி தலைக்கேறி ஆடும் பிசாசுகளால் ஒரு பிரயோஜனமுமில்லை.

கொழும்பிலுள்ள தமிழர்கள் யாவரும் அன்று கூட்டத்திற்கு திரளாகச் சென்று தமிழரின் அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள். தமிழான் ஸ்தாபனம் தமிழ்க் காங்கிரஸ்தான் என்று சொல்லுங்கள்.

இங்ஙனம்,
த. பொன்னுத்துரை,
கொழும்பு, 28-11-47

சுதந்திர நாட்டுக்கு நிலையான இராணுவம்

செனட் சபைக் கூட்டத்தில் ஸ்ரீ பெரிசுந்தரம் பேச்சு

கொழும்பு, நவ. 28

செனட் சபைக் கூட்டம் நேற்று பிற்பகல் நடைபெற்றபோது செனட் சபை அங்கத்தவர் திரு. பெரிசுந்தரம் பேசுகையில், சுதந்திரம் வழங்கப்பட்டதும் எங்களுக்கு உதவிக்காக ஒரு நிலையான கடற்படை தரைப்படை இருக்கவேண்டியது அவசியமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று குறிப்பிட்டார்.

செனட் சபை அங்கத்தவர் ஸர் மாக்கான் மரைக்கார் பேசுகையில் இராணுவ விஷயமாக அரசாங்கம் கவனிக்குமென தாம் நம்புவதாகக் கூறிவிட்டு தேசத்தின் வருமானம் செலவுக்குப் போதாதவிடின் தான் வரி விதிக்கப்படவேண்டுமென்றும் உணவு உற்பத்திக்கு ஐந்து வருடத் திட்டம் வகுத்து வேலை செய்யப்படவேண்டுமென்றும் வீடமைப்பு, ஜல விநியோகம் முதலியவை பற்றியும் வர்த்தகம்பற்றியும் குறிப்பிட்டார்.

செனட்டர் ஜே. கொத்தலாவல பேசுகையில் இத்தேசத்தின் அரசாங்கம் ஒருபகுதி மக்களிடம் இருப்பதாக குறிப்பிட்டார்.

செனட்டர் குமாரசுவாமி இலவசக் கல்விபற்றி தாம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுருவில் முன்னேற்றச் சங்கம்

ஊர்காவற்றுறை, நவ. 24

இச்சங்கத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில் சுருவில் தண்ணீர் பந்தல் மடத்தில் திரு சிற்றம்பலம் அவர்கள் தலைமையில் கூடியது. திருவாளர்கள் சு. சிவசம்பு, டி. இராஜசேகரன் ஞானப்பிரகாசம், நா. சிவஞானசுந்தரம் முதலியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் சங்க உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். திரு நா. சின்னத்துரை அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் பூர்த்தியாயிற்று. (ந-நி)

ஜிந்தும்பிட்டியில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
"எவரெடி"
என்னும் ஹிந்தி பேசும் படக்காட்சி
பெஞ்சமின் ஷர்டா, பிவி சதக் அலி முதலியோர் நடித்தது.

"அமிர்த ப்ராஸ்" கருணைக்கிழங்கு லேகியம்.
காட்டுக் கருணைக் கிழங்கும் அநேக உயர்தர மூலிகைகளும் சேர்ந்தது.
மூலமுளைகள், ரத்தம், சீழ்வடிதல், பவுந்திரம், வாய்வு, மூல உஷ்ணம் சுகமாகும்.
24 நாள் அமிர்த ப்ராஸ் (காலை) ரூ. 4-8-0
" நாக பஸ்பம் (மாலை) " 5-0-0
மூலமுளைக் களிம்பு 1 புட்டி 1-0-0
(கேட்லாக் இனாம்) வி. பி. செலவு குபா 1-8-0
தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி பழனி. (S India)

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை
அகற்றிவிட்டீர்களா?
நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம், எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் தீராதெனக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைக்கிய பூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக் கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார். அவர் இம்மாதம் (19-ம்தேதி) தொடக்கம் எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்களுடன் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு, கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.
சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம்.எஸ சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர்
ஸ்கின்னர்ஸ ரோடு—மருதானை
தினசரி மாலை 2-30, 6-15 இரவு 9-30 மணிக்கும்
முதல் நம்பர் இலங்கை ஹாஸ்ய நடிகர்
எடிஜெயமான---
நக்மணிதேவி
மற்றும் பலர் மிகத் திறமையுடன் நடிக்கும்
"இழந்த உறுதி"

என்னும் சித்ரகலாவின் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம் காண்பிக்கப்படும்
ஒவ்வொருகாக்ஷியிலும்அநேகர் இடமின்றி திரும்புகின்றனர்
முன் இடம் தேடுங்கள்
புதிய இயந்திர அமைப்போடு இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிற்காக, 1947-ம் ஞு நவம்பர் மீ 29உ இந்த பத்திரிகை 194A தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org